**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.283/2023**

17.07.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.கி.சுதா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 2 குமாரசாமி த/பெ.சுப்ரமணி: பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

என்னை நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல அழைத்தது யார் என்றால் வாதி முத்துராஜ். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொன்னது என்றால் எனக்கு தெரிந்ததை சொல்லியுள்ளேன். முத்துராஜ் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. யார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் இந்த உயிலில் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் தங்கவேலு கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சி கையெழுத்து போட்டேன். மேற்படி உயில் எழுதப்பட்ட சமயத்தில் நான் எங்கு வசித்தேன் என்றால் மெயின்ரோட்டில் தங்கவேல் வீட்டிற்கு எதிர்திசையில் உள்ள வீட்டில் வசித்தேன். எந்த தேதியில் உயிலில் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் 2003ம் வருடம் போட்டேன், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. அப்போது தங்கவேலுவின் உடல்நலம் எப்படி இருந்தது என்றால் நன்றாக இருந்தது. உயில் எழுதிய இடத்திற்கு நான் சென்ற போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் தங்கவேலு, விருத்தாம்பாள், பாண்டிச்சேரியிலிருந்து ஒரு எழுத்தர், அவர் பெயர் தெரியவில்லை, பாண்டிச்சேரியிலிருந்து மற்றும் ஒருவரும் வந்திருந்தார்கள். உயில் எழுத எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1 மணி நேரம் ஆனது. எந்த சமயத்தில் உயில் எழுதப்பட்டது என்றால் மதிய நேரத்தில் எழுதப்பட்டது. உயில் எழுத சொத்து விவரம் மற்றும் பத்திர பதிவு எண்கள் சொன்னவர் யார் என்றால் தங்கவேலு கூறினார். உயிலை படித்து காண்பித்தார்களா என்றால் உயில் எழுதிய எழுத்தர் படித்து காண்பித்தார். உயில் எழுதிய பிறகு தங்கவேலு

எந்த ஆண்டு காலமானார் என்றால் 2008ம் ஆண்டு காலமானார். அவருடைய இறுதிசடங்கிற்கு கொள்ளிவைத்தவர் யார் என்றால் முத்துராஜ். முத்துராஜ் மற்றும் வெங்கடேசனுக்கிடையில் சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வளவனூர் காவல் நிலையத்தில் முத்துராஜ் புகார் கொடுத்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் எழுதிய பிறகு அது யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால் தங்கவேலுவின் பொறுப்பில் இருந்தது. நான் சொல்வது போல சொன்ன தேதியில் தங்கவேலு உயில் எழுதிவைக்கவில்லை என்றும் அவர் இறந்தபிறகு இந்த உயில் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் முத்துராஜ் என் நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.283/2023**

17.07.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.கி.சுதா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 3 குசலாபதி த/பெ.சபாபதி: பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் யாருடைய அழைப்பின் பேரில் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் முத்துராஜ்(வாதி) அழைத்ததால் வந்துள்ளேன். வாதிக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் என் அப்பாவும் அவருடைய அப்பாவும் சகோதரர்கள். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு யார் சொன்னது என்றால் வக்கீல் தான் சொன்னார். தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் முத்துராஜ் அனுபவத்தில் உள்ளது. முத்துராஜ் இந்த வழக்கில் வெங்கடேசன் மற்றும் சரஸ்வதி மீது என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் வெங்கடேசன் அடிக்கடி பணமும் சொத்தில் பங்கும் கேட்டு துன்புறுத்துகிறார் என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் உயிலில் எந்த தேதியில் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் 2003ம் வருடம் போட்டேன் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. உயிலில் சாட்சி கையொப்பம் போடுவதற்கு என்னை அழைத்தவர் யார் என்றால் தங்கவேலு அழைத்தார். எத்தனை மணிக்கு சாட்சி கையொப்பம் போட போனேன் என்றால் காலை சுமார் 10 அல்லது 11 மணிக்கு சென்றேன். நான் உயிலில் சாட்சி கையொப்பம் போட சென்ற போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் தங்கவேலு, விருத்தாம்பாள், குமாரவேலு, உயில் எழுதிய சுப்பையா மற்றும் நானும் இருந்தோம். நாங்கள் எவ்வளவு நேரம் அங்கு இருந்தோம் என்றால் சுமார் 2 அல்லது 3 மணி நேரம் இருந்தோம். அப்போது தங்கவேலு நல்ல உடல் நலத்துடன் இருந்தாரா என்றால் நல்ல உடல்நலத்துடன் இருந்தார். உயில் எழுதுவதற்கு சர்வே எண், பத்திர

எண்கள் போன்ற விவரங்களை சொன்னவர் யார் என்றால் தங்கவேலு சொன்னார். உயிலை எனக்கு படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். உயில் எழுதிய பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து தங்கவேலு இறந்தார் என்றால் சுமார் 2 அல்லது 3 வருடங்கள் கழித்து இறந்தார். நான் தங்கவேலுவின் இறப்பிற்கு சென்றேனா என்றால் சென்றேன். அவருக்கு கொள்ளிவைத்தது யார் என்றால் முத்துராஜ். நான் சொல்வது போல சொன்ன தேதியில் தங்கவேலு உயில் எழுதிவைக்கவில்லை என்றும் அவர் இறந்தபிறகு இந்த உயில் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் முத்துராஜ் என் உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.